முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணப்ப நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.10.2023**, செவ்வாய்கிழமை

1. மாதவ நாஜனே அரங்கா
மரணம் வெல்லும் மார்க்கம்
பூதலத்தில் அருள வந்த
புண்ணியனே ஞான தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது தரிவை திங்கள்
அச்சமற மூவையோர் திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 16 ம் நாள், 03.10.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் கண்ணப்ப நாயனாரும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமிலா ஞான வாழ்வு தரும்
சுப்பிரமண்யர் ஞானம் அருளுகின்ற
4. அருளுகின்ற அரங்கன் வழிமுறையை
அனைவரும் ஏற்று வருக
அருளுடன் பொருள் வளமும் கூடி
ஆன்மீக ஞான பலம் கூடும்
5. கூடவே அன்னதான நெறி
குறைவிலா தயவை வளர்க்கும்
இடரில்லா உயர் வழியாக இருக்க
எல்லோரும் ஏற்று வந்து
6. வந்துமே அன்னதான சேவை ஆற்றி
வல்லமைபட தருமம் வளர்க்க
சிந்தை முழுக்க தரும பலமாகி
செப்பிடுவேன் சேவை நோக்கம்

7. நோக்கம் பெருகி சிறப்பறிவு
நீதி நெறி காக்கும் வண்ணம்
ஆக்கமுடன் சக்தி நிலைகூடி
அரங்கஞானி தேடும் ஞானவான்களாக
8. ஆகவே எங்கும் மாற்றம்
அகிலத்தில் முழுமைபட கண்டு
வகையான ஞானப்படைகள்
வடிவேலன் வழிகாட்டலால் மாறி
9. மாறியே ஞானிகள் ஆக
மக்களெல்லாம் தேறியே
பேருலகை காக்கும் வண்ணம்
பேராசான் அவதார நோக்கம் ஆக
10. ஆகவே ஞானத்தலைமையும்
அகிலமதில் ஞான ஆட்சியும்
வகைபட மாற்றமாகக் கண்டு
வையகம் ஏற்றம் காண்கும்
11. காண்கவே நல் பாதுகாப்பும்
கருணையே வடிவான ஆளுமையும்
சண்முகனார் ஆட்சியாக மாறும்
சாற்றிவந்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—